## விவசாயிக்கு கைகொடுத்த சவுக்கு மரம் !

என் பெயர் சேகர் !

நான் டி.என்.பி.எல் நிறுவனத்தில் 2019 ஆம் ஆண்டு சுமார் 6 ஏக்கரில் சவுக்கு குளோனல் ரக கன்றுகளை நடவு செய்தேன். கடந்த 2 மாதங்களுக்கு முன் எனது தோட்டத்தில் உள்ள மரங்கள் காற்று மழையால் சேதமடைந்தது. இரண்டு வருடமே ஆன எனது சாய்ந்த மரங்களை வைத்து செய்வதறியாது திகைத்தேன்.

எனினும் டி.என்.பி.எல் அலுவலர்களிடம் என் நிலைமை பற்றி எடுத்துரைத்தேன், அதனை கருத்தில் கொண்டு நிறுவனமானது என்னுடைய இக்கட்டான சூழலை புரிந்து, டி.என்.பி.எல் வனத்தோட்டத்தில் பதிவு செய்த விவசாயியான எனக்கு முன்னுரிமை அளித்து கூழ்மரம் அறுவடை செய்ய பணி ஆணை வழங்கியது. அதனை தற்போது அறுவடை செய்து கூழ்மரக்கட்டைகளை நிறுவனத்திற்க்கு அனுப்பி வருகிறேன்.

இரண்டு வருடமே ஆனாலும், ஏக்கருக்கு 20-25 மெட்ரிக் டன் மகசூல் தருவது, எனக்கு இலாபத்தையும், மன நிம்மதியையும் தருகிறது. ஆகவே இக்கட்டான சூழலிலும் கைகொடுத்த சவுக்கு மரத்தை, நான் மீண்டும் டி.என்.பில் நிறுவனத்தின் மூலமாகவே பயிர் செய்ய உள்ளேன் என்பதை மகிழ்வுடன் கூறுகிறேன்.

இப்படிக்கு
உங்களில் ஒரு விவசாயி
D.சேகர், பாப்பாக்குடி, அரியலூர்
தொடர்பு எண் - 9976966781




சாய்ந்த சவுக்கு தோப்பு

